பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 மாசி 21 ரபிஅவ்: 13 இதழ்: 22

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-3-77

வளாக மாணவருக்குச் சிகிச்சை.

## நரம்பு வைத்திய நிபுணர் விமான மூலம் வந்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்பு பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த நரம்புச்சிகிசை நிபுணர் டாக்டர் கப்றல் நேற்று முற்பகல் விமானமூலம் யாழ்ப்பாணம்வந்துள்ளார்.

யாழ். வளாக வட்டுக்கோட்டைப் பிரிவு மாணவர் இருவர் தாக்கப்பட்டு யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அல்லவா?

தாக்குதல் சம்பவத்தில் கத்திக் குத்துக்கு இலக்காகி அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களில் ஒருவருக்கு அவசர சிகிச்சை அளிக்கும் பொருட்டே இவர் இங்குவந்துள்ளார். மற்றமாணவரின் உடல்நிலை தேறி விட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து வந்த டாக்டர் கத்திக்குத்துக்குள்ளான மாணவருக்கு நேற்று மாலை அவசர சத்திரசிகிச்சை ஒன்றை செய்தார். அம்மாணவர் சாதாரணமாக அளவளாவிக் கொண்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்திற்கும் வளாக மாணவர்களுக்கும் தொடர்பில்லையென்றும் இச்சம்பவம் வளாகத்துக்கு வெளியில் நடைபெற்றதாகவும் பொலீசார் கூறியுள்ளனர் என்பது தெரிந்ததே. (உ)

# அரசு - கூட்டணி உறவை

# குலைக்க வலதுசாரிகள் சதி

## குப்பிளான் வரவேற்பில் அமைச்சர் சூரியர்



யாழ்ப்பாணம். வெள்ளி

'திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தலைமையிலான அரசாங்கத்திற்கும், தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும்இடையே நடைபெற்று வரும்சமரஸப் பேச்சுவார்த்தைகளை முறியடிக்கவலதுசாரிசக்திகள் சதிசெய்துவருகின்றன இதுகுறித்துநாம்எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று நான்கூறும் அதே வேளையில் த. வி. கூட்டணியினருக்கு வேண்டுகோளொன்றினையும் விடுக்க விடும்புகின்றேன். வரும்காலத்தில்இவர்கள் வலதுசாரிகளுடன் எத்தகையஇணைப்பையும் வைத்துக்கொள்ளக் கூடாது'.

இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும், தபாலமைச்சருமான திரு.செல்லையா குமாரசூரியர் குப்பிளானில் நேற்று முற்பகல் நடைபெற்ற வைபவமொன்றில்பேசுகையில் கூறினர்.

திரு. குமாரசூரியர் சுன்னகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் ஆதரவில் குப்பிளானில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பாடசாலையைத் திறந்து வைத்ததுடன், குப்பிளான்உபதபால்நிலையத்திற்கானதொலைபேசித்தொடர்பையும் நேற்று முற்பகல் ஆரம்பித்துவைத்தார்.

இதன்பின் உடுவில் தொகுதிசுதந்திரக்கட்சிக் கிளையினரால், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பதவியும் திரு. குமாரசூரியருக்கு அளிக்கப்பட்டதை வரவேற்று குப்பிளான் விக்னேஸ்வர வித்தியாலயத்தில் திரு. கு. விநோதன் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

### தமிழருக்குத் தரப்பட்ட கௌரவம்

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில் மேலும் கூறியதாவது:

"எனக்குத் தரப்பட்டுள்ள இப்

(8-ம் பக்கம் பார்க்க)

### பலாலியில் வரவேற்பு

மாவிட்டபுரம், வியா.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராகவும் பதவியேற்றுக்கொண்ட பின் யாழ்ப்பாணத்திற்கு முதல்தடவையாக இன்று காலை உத்தியோக பூர்வமாக விஜயம் மேற்கொண்ட தபால்-தந்திதொலைபேசி தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியருக்கு பலாலி விமானநிலையத்தில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அமச்சரை யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எல். விஜயபால முதலில் மாலைசூட்டி வரவேற்ருர்.

அதனைத் தொடர்ந்து யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசெப், யாழ் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. என். அமிர்தசாகரன், வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா மற்றும்காங்கேசன் துறை சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. ரி.பி. முருகையா மானிப்பாய் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. கு. விநோதன் முதலானோர் அமைச்சரை வரவேற்றனர். (உ)

### நீச்சல், படகு போட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். லயன் களியாட்டு விழாவையொட்டி, யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக நீச்சல்போட்டியும், படகு ஓட்டப்போட்டியும்நடைபெறவுள்ளன. காரைநகர் சீநோர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஆதரவில் இப்போட்டிகள் நடைபெறும். இதில் பங்கு

(2ம் பக்கம் பார்க்க)

### "பண்ணும் பரதமும்" வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை இசைப் பேரவையின் 'முத்திங்கள்' வெளியீடாகிய 'பண்ணும் பரதமும்' எனும் சஞ்சிகையின் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை மாலை 3 மணியளவில் இலங்கை இசைப் பேரவைத் தலைவர் திரு. பி. சந்திரசேக

(8-ம் பக்கம் பார்க்க)

கச்சதீவு உற்சவம்:

## குருநகரில் மேலதிக தடுப்பு ஊசி நிலையம்

### படகு லைசென்ஸ் வழங்கும் வேலைஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கச்சதீவு செல்லும் யாத்திரிகரின் நலன் கருதி சுகாதாரப் பகுதியினர் குருநகர் அரசினர் ஆஸ்பத்திரியில் தடுப்பு ஊசி போடுவதற்குரிய நிலையம் ஒன்றினை அமைத்துள்ளனர்.

தற்போது முன்னர்போல் யாழ். செட்டித்தெருவிலுள்ள பகுதியில் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்ற போதிலும் மேற்படி நிலையம் மேலதிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையம் இம்மாதம் 1-ம் திகதியிலிருந்து 8ம் திகதிவரை செயற்படுமென்றும் தடுப்பு ஊசி செலுத்தியதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படுமென்றும் சுகாதாரப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

### 35 பேர் மனு

இது இவ்வருடத்... கச்சதீவு உற்சவத்தின்போது அங்கு தேநீர், உணவுக்கடைகள் நடாத்துவதற்கு 35 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவ்விண்ணப்பங்கள் யாழ். சுங்க அலுவலகத்தில் பரிசீலனைசெய்யப்பட்டு வருகின்றன.

தகுதியுடைய விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் அடுத்தவாரம் வழங்கப்படும். வியாபாரத்தின் பொருட்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## பாலைதீவு உற்சவம் இன்று ஆரம்பம்

### மண்டை தீவிலிருந்த இலவச படகு சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி

மண்டைதீவுக் கடற்ரெழில் துறைமுகத்திலிருந்து இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் தொடர்ந்து 7-ம் திகதி திங்கட்கிழமை காலைவரை பாலைதீவு யாத்திரிகர்களை இலவசமாக ஏற்றிச் செல்வதற்கான இயந்திரப் படகுச்சேவை ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. பாலைதீவு அந்தோனியார் உற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

இதன்பொருட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து மண்டைதீவுக் கடற்ரெழில் துறைமுகத்திற்கு நேரடியான சேவையும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதோடு தண்ணீர்ப் பந்தல் வசதிகளும் இலவசமாக அமைக்கப்பட்டுள்ளன. (உ)

### சிப்பாய்கள் செய்தி தவறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் யாழ்.நகரில் நடந்த சம்பவங்களில் பலாலி இராணுவமுகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் சம்பந்தப்பட்டதாக வெளிவந்த செய்தி தவறென்றும் அந்த முகாமிலிருந்து அன்று இரவு வாகனம் எதுவும் வெளியே வரவில்லையென்றும் இராணுவ உத்தியோகத்தர் நேற்றுமறுப்புத்தெரிவித்தார். அவர் தமது பெயரை வெளியிடவிரும்பவில்லை.

## சுபசிங்காவின் ராஜினமா தீயநோக்குடையது

### மறைமுகஅரசுபற்றிய கருத்தும் புரியாத புதிர் என்கிறுர் பிரதமர்

கொழும்பு, வியா

இந்தநாட்டில்அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் புறம்பான சக்திவாய்ந்த மறைமுகமான அரசாங்கம் ஒன்று இயங்கிவருகின்றது என்பதை இதுவரை திரு. சுபசிங்கா தம்மிடம் தெரிவிக்காமல்விட்டது பெரும் புதிராக இருக்கிறது என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தமது பதவியை ராஜினமா செய்த கைத்தொழில் விஞ்ஞானஅமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்காவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. சுபசிங்காவின் ராஜினமா தீயநோக்குடன்செய்யப்பட்டதென்றும் அவர் மீது தனிப்பட்ட வெறுப்பு எதுவும் கிடையாது என்றும் பிரதமர் அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

பிரதமரின் கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது:-

அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் புறம்பான ஒரு அரசு இயங்கி வருவதாகவும், அதில் ஐக்கிய முன்னணியுடன் சம்பந்தப்படாதவர்கள்அங்கம்

(8-ம்பக்கம் பார்க்க)

# யாழ்லயன் களியாட்டு விழா-77

(யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்

**கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.**

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

## போட்டி நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாயஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பாண்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட்டம் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி. [17] யாழ்.அழகு ராணிப் போட்டி., [18[ வாண வேடிக்கை.

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும்விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ..............................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்: ..............................

விலாசம்: ..............................

வயது: ....................

விளையாட்டுப்போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

..............................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்

..............................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11 மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9ந் திகதிக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## காங்கேசன்துறை சடலம் அடையாளம் காணப்பட்டது

மாவிட்டபுரம், வியாழன் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வளவுக் கிணற்றில் கிடந்த இனந் தெரியாத நிர்வாண சடலம் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப் படவிருந்த இறுதி நேரத்தில் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை பாதுகாப்புச் சேவையாளர் விடுதிக் கிணற்றில் கிடக்கக் காணப்பட்ட இச்சடலம் தாவடியைச் சேர்ந்த இரத்தினம் (வயது 52) என்பவரினது என்று அடையாளம் காணப்பட்டது. இவரது மனைவி தமது கணவரின் சடலத்தை அடையாளம் காட்டினார்.

தொடர்ந்து மனைவியிடமும் உறவினர்களிடமும் சடலம் கையளிக்கப்பட்டது. (ஆ)

## நீச்சல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவிரும்புபவர்கள் அதற்கான விண்ணப்பத்தை இம் மாதம் 20ம் திகதிக்கு முன்னோக அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான விபரமான விளம்பரம் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவருகிறது. (ஆ)



## தவக்கால நற்சிந்தனை

''மனுஷனுடைய இதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், துராதனமும், பெருமையும், காமவிகாரமும், வன்கண்ணும், மதிகேடும் புறப்பட்டு வரும்: பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்''.

மாற்கு 7: 21-27

நம்மனத்தை அமைதிப் படுத்துவதற்கு, அந்த அமைதிக்குவழிதேடுவதற்கு, அந்த வழிக்கு ஒரு துணையை நாடுகிறோம். அதற்காக எத்தனை எத்தனை கதைப்புத்தகங்களைக் கட்டுரைக் களஞ்சியங்களைப் படிக்கிறோம். காமக்கதை, துப்பறியும் புதினங்கள், மாயாஜால இந்திர, தந்திர, மந்திர, மர்மப்படுகொலைகள், மேல் நாட்டு நூதனக்கதைகள் ஆகிய அனைத்திலும் ஆழ்ந்து விடுகிறோம். அவை அனைத்துங்கூட நம் மனஅமைதிக்குத் துணையாகிவிட முடியுமா? நாடகம், படக்காட்சி, கண்காட்சி மற்றும் எத்தனையோ வேடிக்கை விநோதங்களைப் பார்த்து நம் மனஅமைதிக்கு உறுதுணையைத் தேடுகிறோம். அவைதாம் அமைதியைத் தருகின்றனவா? இத்தனைக்கும்மேலாக நமக்கு உண்மையான துணை, உறுதுணை எது வென்று புரியாமலேயே நம் மனத்தை அதுசெல்லுகின்ற இடமெல்லாம் அலையவிட்டுச் சொல்லொணு வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் இலக்காகின்றோமல்லவா.

மரத்திற்கு வேர் துணை. மண்ணுக்கு விண் துணை. மாநிலத்திற்கு மன்னன் துணை. ஆனால் அழியாத நம் ஆன்மாவுக்கு யார் துணை? சிந்தித்தோமா? அமைதிக்குத் துணைதேடிக்கொள்ள நாம் இயேசுபெருமானிடம் சரண் அடைந்தோமா?

— (ஞானஒளி)

# சிறுவிளம்பரம்

## விற்பனைக்கு

மானிப்பாய் மேற்கு விஜய சிங்களப் பாடசாலை டியூட்டறி தளபாடங்கள் மலிவாக விற்கப்படும். விபரங்களுக்கு: மேற்படி டியூட்டரியுடன் தொடர்பு கொள்க. 5606

பரந்தன் முல்லைத்தீவு றோட்டில் 10-ம் கட்டை சுண்டிக்குளத்தில் (விசுவமடுவிற்கு அண்மையில்) 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல: 5581, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5581

## தேவை

தமிழ், சிங்களம் ஆங்கிலம் பேசக்கூடிய காசாளர் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவராக இருத்தல்வேண்டும். மாலை 5 மணியில் இருந்து 8 மணிவரை தொடர்புகொள்ளவும் நியூ டில்கா 202 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5608

## கல்வி

G. C. E. (O.L), G. C. E. (A. L), H. N. C. E., கலை, விஞ்ஞானம் வர்த்தகம், இரசாயனம், பௌதிகம், தாவரம், விலங்கியல் முதலிய பாடங்களுக்குச் செய்கை முறைப் பயிற்சி (Pratical) அளிக்கப்படும். தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறும். உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். வித்தியாபகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலை. 5585

G. A. Q., G. S. Q. ,B. A வகுப்புகள் சட்டக்கல்விப் பட்டப்படிப்பு முதல் பரீட்சை (L. L. B.) வகுப்புகள் படம் வரை பயில்வோர் (Draugtsmanship) வகுப்புகள் விபரங்களுக்கு: பதிவாளர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 5584

## வகுப்புகள்

யந்திரவியல், படவரைஞர் (Mechanical Draughtsman) கற்றோருக்கு பிறநாடுகளிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்புகள் உண்டு. என்ஜினியர் நடத்தும் வகுப்பு ஆரம்பம் 5-3-77. சார்ட்டட் என்ஜினியரால் நற்சாட்சிப்பத்திரம் வழங்கப்படும். நியூபிறில்லியன் இன்சிரியூட். 'திருத்தணிகை' 284 பலாலிவீதி, கந்தர்மடம். 5596

# கேள்வி விளம்பரம்

## மானிப்பாய் பட்டினசபை

1977-ம் ஆண்டுக்கு கீழ்க்காணும் உரிமைகளுக்கான கேள்விகள் 18-3-77 காலை 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஆட்டிறைச்சிக்கடை. கடையில் ஆட்டிறைச்சி விற்றல்.

16-3-77 பிற்பகல் 2-30 மணிக்கு முன்னதாக கேள்விப் பிணைப்பணமாக ரூபா 25/-ம், கேள்விப்படிவ விலையாக ரூபா 02/-ம் செலுத்துவதன் பேரில் கேள்விப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரங்களை விசேட ஆணையாளரிடமிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**கே. கோபாலரத்தினம்,**
விசேட ஆணையாளர்,
மானிப்பாய் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
மானிப்பாய் பட்டினம்,
மானிப்பாய்,
1-3-77. 5601

# வேலை பழகுபவர்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை பழகுவதற்கு மேலும் ஆண்கள் உடனடியாகத் தேவை. கூடிய கெதியில் வேலை பழகி கூடிய சம்பளத்தைப் பெறுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

உடனே நேரில் வரவும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி. 5604

# M. E. I.

508, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். கிளை: வேலணை M. M. Vக்கு முன்பாக

## 1977 வருட வகுப்புகள்

H. N. C. E. (2-ம் வருடம்) கணிதம் உயிரியல் நடைபெறுகிறது.

ஏனைய பாடங்கள்
H. N. C. E. 1-ம் வருடம் — 5-3-77ல் ஆரம்பமாகும்

முழுப் பாடங்களும்
A/L, O/L கலை/விஞ்ஞானம் வர்த்தகம் — 14-3-77இல் ஆரம்பம்

முழுப்பாடங்களும்
N. C. G. E. 6, 7, 8 கணிதம், விஞ்ஞானம் (do)
G. A. Q. 9-3-77 முற்பகல் 9-00 ஆரம்பம்
முழுப் பாடங்களும்

**நடனம் - சங்கீதம்-வேலணை-நடைபெறுகிறது**
**யாழ்ப்பாணம் ஆரம்பம்**
**12-3-77 சனி பிற்பகல் 3 மணி**

English - English Language Start on 14-3-77

கடித மூலம் பெயரைப் பதிவு செய்க

**பிற்பகல் 4-00 தொடக்கம் 7-00 வரை**
**நேர் முக சந்திப்பு உண்டு**

கௌரவ பிரதம பதிவாளர்.
5607

# ஜெயப்பிரகாஷுக்கு சிறையில் ஏன் நோய்: நீதி விசாரணைவேண்டும்

## ஜனதா கட்சி கோருகிறது

புதுடில்லி, மார்ச், 3
ஜெயப்பிரகாஷ் சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது கடுமையாக நோயுற்றது பற்றியஉண்மையானகாரணத்தை அறிய நீதி விசாரணை நடைபெறவேண்டுமென்று ஜனதா கட்சிகோரிக்கை விடுத்துள்ளது.

ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு ஏற்கனவே இருதயநோய் இருந்தது. ஆனால் அவருக்கு சிறுநீரகத்தில் குழறுபடிஇருக்கவில்லை. இவ்விதநோய் அவருக்கேற்படக் காரணமென்ன என்பதை அறிய நீதிவிசாரணை ஒன்று அவசியம்'' என்று ஜனதாகட்சி கூறியுள்ளது.

தேர்தல் பிரசாரங்களில் கலந்துகொள்ளும் பொருட்டு சூறுவளிப்பிரயாணத்தை மேற்கொண்டிருந்த ஜெயப்பிரகாஷ் நாராயண் திடீர் சுகயீனமுற்று பம்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் சிறுநீரகத்தில் சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டதும் தெரிந்ததே. ஜெயப்பிரகாஷ் நாராயணின் உடல்நிலை தற்போது தேறிவருவதாக வைத்திய அறிக்கைகள்கூறுகின்றன. (ஆ)

## சுவிஸ் வங்கியின் இரகசியம்:

### சுவிஸ் மத்திய வங்கி கண்டனம்

லண்டன், மார்ச். 3
சுவிஸ்வங்கிதனதுவாடிக்கையாளர்களின் விபரங்களைஇரகசியமாக வைத்திருப்பதை சுவிஸ் மத்தியவங்கி கண்டித்துள்ளது.

இதன் இரகசிய ஒப்பந்தம் மூலம் நாணய மோசடி, வரி ஏமாற்றம் போன்றவற்றை சுவிஸ்வங்கி ஊக்குவிப்பதாக சுவிஸ் மத்தியவங்கியின் உப தலைவர் கூறியிருக்கிறார்.

இந்தவங்கியின் உறுதிப்பாடு காரணமாக வெளிநாட்டவர் அதிக வாய்ப்படைவதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (ஆ)

## தமிழ்நாட்டிலிருந்து நியூயோர்க்குக்கு நடராஜர் சிலை

சென்னை, மார்ச் 3
தென்னிந்தியாவிலிருந்து நடராஜர் சிலை கொண்டுவரப்பட்டு அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் பிரதிஷ்டை

(6-ம் பக்கம்பார்க்க)

## "அரசியல் பண்பாடு காப்பவர் நாம்"

### கருணாநிதி சொல்கிறார்

சென்னை, மார்ச் 3
"திராவிட முன்னேற்றக் கழகத்தினர்அரசியல் பண்பாடு காப்பவர்கள்'' என்று தி. மு. க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி சொன்னார்.

சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் பேசுகையில் கூறியதாவது: "1967ம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றபோதும்சரி, அதற்குப் பிறகு நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதும்சரி காமராஜருடைய இல்லத்திற்குச் சென்று, அவரிடத்திலே வாழ்த்தைப் பெற்ற பிறகுதான் அந்தப் பொறுப்பிலேவந்தமர்ந்தோம். இப்படிப்பட்ட அரசியல் பண்பாடு மிக்க கழகத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்.'' (உ)

## சி. எஸ்ஸின் உவமைக்கு கருணாநிதியின் விமர்சனம்

சென்னை, மார்ச் 3
லோக்சபா தேர்தலில் தமிழ்நாட்டின் பழனித் தொகுதியில் ஆளும் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் மத்திய நிதி அமைச்சர் திரு.சி.சுப்பிரமணியம் "இத்தேர்தலைப் பாரதப் போருக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டணியைக் கௌரவர்களுக்கும் ஒப்பிடலாம்'' என்று தமது தேர்தல் பிரசாரத்தின் போது கூறினார்.

இது குறித்து தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கருத்து வெளியிட்டுள்ளார்.

கலைஞர் கூறியிருப்பதாவது;

"பாண்டவர்கள், கௌரவர்களால் காட்டுக்குத் துரத்தப்பட்டு வனவாசத்தை முடித்துவிட்டு, மீண்டும் தங்களுக்குரிய நாட்டைக் கேட்டு, அதற்குக் கௌரவர்கள் இணங்காத காரணத்தால் விளைந்ததுதான் பாரதப்போர். வனவாசம் புரிந்தவர்கள் பாண்டவர்கள். நாட்டை ஆண்டுகொண்டிருந்தவர்கள் - ஆணவ ஆட்சி நடத்தியவர்கள் கௌரவர்கள். இதுதான் பாரதக் கதை.

திரு. சுப்பிரமணியத்தின் கூற்றுப்படி இத்தேர்தல் ஒரு பாரத யுத்தமென்றால் இதில் கௌரவர்களாக எதிர்க்கட்சி

(6-ம் பக்கம் பார்க்க)

## பட்டினியும் நிர்வாணமும்

## காங்கிரஸ் ஆட்சியில் இல்லைஎன்கிறார் இந்திரா

புதுடில்லி, மார்ச் 3
காங்கிரஸ்ஆட்சியைக் குறைகூறுவதைவிட ஜனதாகட்சியினருக்கு வேறு எந்தக்கொள்கையும் கிடையாது. காங்கிரஸ் ஆட்சியில் எவரும் பட்டினி கிடந்ததில்லை. நிர்வாணமாகத் திரிந்ததுமில்லை.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி புதுடில்லியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

எதிர்காலம் எவ்வாறு அமையப்போகிறது என்பது எதிர்வரும் பொதுத்தேர்தலிலேயே தங்கியுள்ளது.

**பொலிஸ்நாடு...**

நமதுநாடு பொலிஸ்நாடு என்று எதிர்க்கட்சியினர்கூறிவருகின்றனர். பொலிஸ் நாடாக இருந்திருந்தால் எதிர்க்கட்சியினர் தமது மனப்போக்கில் எல்லாம் நம்மைப்பற்றி அவதூறாகக் கூற முடியுமா? (இ)

## தமிழ் நாட்டின் வீழ்ச்சி கண்டு வயிறு எரிகிறதாம்

### சி. சுப்பிரமணியம் கவலை

சென்னை, மார்ச். 3
தி. மு. க.ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு அதலபாதாளத்தில் விழுந்துவிட்டது என்று கூறி கவலைப்படுகிறார் மத்திய நிதியமைச்சர் திரு. சி.சுப்பிரமணியம். பழனியில் நடைபெற்ற கூட்டமொன்றில்இப்படிஇவர் கூறினார்.

தி. மு. க. வின் ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் தமிழ்நாடு வளர்ச்சி பெற்றிருக்கிறதா? இல்லையா? என்பது பற்றி விவாதிக்கதயாராஎன்று கேட்டு தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி மத்தியநிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியத்திற்கு சவால் விட்டுள்ளார்.

"தி. மு. க. ஆட்சியில்தமிழ்நாடு அதலபாதாளத்தில் விழுந்துவிட்டது. தி.மு.க. ஆட்சியில் உருத்தெரியாமல் போன தமிழ் நாட்டைப் பார்த்து என்வயிறுஎரிகிறது'' என்று திரு. சி.சுப்பிரமணியம் தாம் போட்டியிடும் பழனித் தொகுதியில் நடைபெற்றதேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் பேசுகையில் தி. மு. க. மீது குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளிக்குமுகமாகவே கருணாநிதி இச்சவாலை விடுத்துள்ளார். (உ-ஆ)

## தமிழ்நாட்டில்:

## நியாயமான தேர்தல் நடைபெற வழிசெய்யுங்கள்

### கருணாநிதி பிரதமரிடம் கோரிக்கை

சென்னை, மார்ச் 3
தமிழ்நாட்டில் நேர்மையான, சுதந்திரமான தேர்தலை நடாத்த வழிவகுத்துத் தரும்படி தமிழ்நாடு முன்னாள் முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும், பதில் ஜனாதிபதி திரு. ஜட்டி, தமிழக கவர்னர் திரு. மோகன்லால் சுக்காடியாவையும் கேட்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேலும்பேசுகையில் கருணாநிதி கூறியதாவது:

**இரண்டுபேர் பிணங்களாக சிறைமீண்டனர்**

இந்திராவின் ஆட்சியில் மதுரைச்சிறையிலிருந்து சாத்தூர் பாலகிருஷ்ணனும் சென்னைச் சிறையிலிருந்து சிட்டிபாபுவும் பிணங்களாகவே வெளியே அனுப்பப்பட்டனர். நல்லவேளை பிணங்களாகவாவது அவர்களை அரசு ஒப்படைத்தது.

25ஆயிரம்பேரை சிறையில் அடைத்து பகுதிபகுதியாக விடுவித்தார்கள். இன்னும் 500 பேரை 'மிசா' கைதிகளாக வைத்திருக்கிறார்கள். ஆனால் மிசா' கைதிகளாக இருந்தவர்களை 'மிசா' ஆசைத்தம்பி என்றோ 'மிசா' நேத்தாஜி என்று எழுதிவிட்டால் அந்த 'மிசா'வை அழிப்பதற்குபொலிசார் ஓடித்திரிகிறார்கள்.

**பேச்சுரிமை இல்லை**

இன்றைய ஆட்சியில் எழுத்துரிமை, பேச்சுரிமை இல்லை. கருத்துக்குக் கருத்துச் சொல்ல முடியாது. காந்திஅடிகளால் பண்டிதநேருவும் இந்த உரிமைகளுக்காகவே வாதாடினார்கள்; போராட்டங்கள்; லட்சக் கணக்கானோர் உயிரையும்மதியாமல் சுதந்திரப்போரில்குதித்தார்கள்.

**சிதம்பரனார் ஏன் செக்கிழுத்தார்?**

இந்த உரிமைகளைப் பெறவே சிதம்பரனார் செக்கிழுத்தார். திருப்பூர் குமரன்கொடிகாத்துச்செத்தான். பகவத்சிங் தூக்குக்கயிற்றை முத்தமிட்டான்.

**அச்சகங்களில் பொலிஸார் கண்காணிப்பு**

எதிர்க்கட்சிகள், முக்கியமாக நாங்கள் என்ன சுவரொட்டிகளை அச்சிடுகிறோம் என்பதை அச்சுக்கூடங்களுக்கு சென்று பொலிசார் பார்வையிடுகிறார்கள். தேச விரோதச் சுவரொட்டிகளையோ ஆபாசச் சுவரொட்டிகளையோ நாம் அச்சிடவில்லை.

அரசு வெளியிட்டுள்ள சுவரொட்டிகளில்தான் எங்களைக் கொள்ளைக்காரர்களைப் போலவும், கொலைகாரர்களைப்போலவும் ஆபாசமாக அருவருக்கத்தக்க வகையில் போடப்பட்டுள்ளது. அதே சுவரொட்டிகளைப் பொலிஸ் பாதுகாத்துக் கொண்டு எமது சுவரொட்டிகளை அழித்துவருகின்றனர்(இ)

## இந்தியத் தேர்தல் அரங்கு

### கருணாநிதி வழக்குக்கு நிதிகொடுத்தார்

'எனது வழக்குநிதிக்கு ஒருரூபாதந்த செங்கற்பட்டு தொழுநோய் இல்லத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அது பற்றி அறிந்த இல்லத்தின் அதிகாரி ஒருவர் அங்கிருந்து வெளியேற்றிவிட்டார். எனினும் அந்த இளைஞர் ஐந்து மாதங்களின்பின் பிச்சை எடுத்துச் சேர்த்த பணத்தில் 80 சதத்தை எனது வழக்கு நிதிக்காக எனது வீடுதேடி வந்து என்மகனிடம் கொடுத்துச் சென்றுள்ளார். நான் அதை 80 கோடி ரூபாவாக மதித்துப் பெற்றுக்கொண்டேன். இதுவும் இந்திரா ஆட்சியின் கொடுமைகளில் ஒன்று' என்று திரு. மு. கருணாநிதி கூறினார்.

### காங்கிரஸ் 25 லட்சம் வசூல்: மொரார்ஜி குற்றச்சாட்டு

இந்திரா காங்கிரஸ் அகமதாபாத் எண்ணெய்த்தொழில் வட்டாரத்திலிருந்து 25 லட்சம் ரூபா தேர்தல்நிதியாக வசூல் செய்துள்ளது என்று ஜனதா கட்சித் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் குற்றம்சாட்டியுள்ளார்.

∵ உறுதியானதும்
∵ நீடித்து உழைப்பதும்
∵ தன்னிகரற்றதுமான
வைத்திலிங்கம்ஸ்
இரும்பு — பித்தளை — மரஸ்குறு ஆணிகளை
நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு,
கொழும்பு - 12
தொலைபேசி: 33143 — 4
கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

### மணிவாக்கு

எப்பொழுதுமே இதயத்தை பேணி வளர். இதயத்தின் மூலம் பேசுவது தெய்வம். புத்தியின் மூலம் பேசுவது நீயேயாம்.

--சுவாமி விவேகானந்தர்

ஈழநாடு
THE EELANADU

# ‘தட்டிக் கேட்கவேண்டும்’

“தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்” என்பது தமிழில் ஒரு பழமொழி.

வடக்கில் ஆயுதப் படைகளைச் சேர்ந்த சிலர் சிலசமயங்களில் சண்டப்பிரசண்டர்களாகிவிடுகின்றனர்.

ஏனென்றல் அவர்களைத் தட்டிக்கேட்பதற்கு யாரும் இல்லை.

சென்ற செவ்வாய்க்கிழமை இரவு யாழ்ப்பாண நகரின் மத்தியில் பஸ்நிலையத்திற்கு அருகே சாதாரண உடையில் வந்த இராணுவச் சிப்பாய் கோஷ்டி ஒன்று வெறியாட்டம் ஆடியிருக்கிறது.

கடைகள் சேதப்படுத்தப்பட்டன; மோட்டார் கார்கள் நொறுக்கப்பட்டன; வீதியால் சென்ற அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்பட்டனர்.

நள்ளிரவில் நடந்த இந்த அட்டகாசத்திற்கு, முன்னிரவில் நடந்த சம்பவம் தான் காரணமென்று சொல்லப்படுகிறது.

சீருடையிலல்லாமல் சிவில் உடையில் வந்த சில சிப்பாய்கள் ஒரு பஸ் வண்டியை நிறுத்தியதாகவும், அது நிற்காதுபோகவே, அதில் பாய்ந்து ஏறி சாரதியுடனும் கண்டக்டருடனும் தர்க்கப்பட்டதாகவும் இதைத் தொடர்ந்து பஸ்ஸினுள் கைகலப்பு ஏற்பட்டதாகவும் இதன் விளைவேபின்னர் நள்ளிரவில் ஒரு ட்ரக்கில் வந்த சிப்பாய்க்கோஷ்டியினரின் அட்டகாசமாம்.

பஸ்ஸில் நடந்த சம்பவத்திற்குப் பொலிஸில் முறைப்பாடுசெய்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியது தான் நியாயம்.

ஆனல் சட்டத்தின் காவலர்களில் ஒரு பிரிவினர் சட்டத்தை மீறி நடந்துள்ளனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து அந்த இரவில் எந்த வாகனமும் வெளியே செல்லவில்லை என்றும் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் வெளியே செல்லவில்லை என்றும் இராணுவ முகாமைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் மறுப்புத் தெரிவித்திருக்கின்றர்.

பதில் நீதவான் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் ஒரு சிப்பாய் அடையாளம் காணப்பட்டிருக்கிறர்.

அணிவகுப்பைப் பார்வையிடுவதற்குப் பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த மேஜர் வீரசூரியாவும் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறர்.

இதனல் இந்தச் சம்பவத்தில் சில சிப்பாய்கள் சம்பந்தப்பட்டிருப்பது உண்மையென்று கருத இடமுண்டு.

முன்னிரவில் நடந்தசம்பவம் பற்றியும் நள்ளிரவில் நடந்த சம்பவம் பற்றியும் விசாரணைசெய்து, குற்றஞ்செய்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டிய பொறுப்பு பொலிஸைச் சேர்ந்தது.

இதேசமயம் யாழ்ப்பாணத்தில் இப்படி ஒரு சம்பவம் நடைபெறுவது இது தான் முதல் தடவையல்ல என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று பொலிஸார் நடந்துகொண்ட மிருகத்தனமான செயல் மறந்துவிடக்கூடிய விஷயமல்ல.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின்பின் சிப்பாய்கள் சிலர் வீதிகளில் வெறிபிடித்து அலைந்து பொதுமக்கள்மீது நடத்திய தாக்குதல்.

பருத்தித்துறை களியாட்டவிழாவில் நடைபெற்றதாக்குதல் சம்பவம்.

பருத்தித்துறை புதிய சந்தைக் கட்டிடத்திறப்புவிழாவின்பின் நடந்த சம்பவம், செம்மணிச்சம்பவம்.

இப்படி இன்னும்பல சம்பவங்களை அடுக்கிக்கொண்டேபோகலாம்.

இந்தச் சம்பவங்களில் ஒன்றிலாவது சரியான விசாரணைசெய்து தகுந்த நடவடிக்கை எடுத்து, குற்றம் செய்தவர்களைத் தண்டித்திருந்தால் மற்றைய சம்பவங்கள் நிகழ வழியிருந்திருக்காது.

தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவம் பற்றி பாரபட்சமற்ற விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டுமென்று பலரும் பல தடவைகளில் கோரிக்கை விடுத்தனர்.

அரசாங்கம் இதற்குச் செவிசாய்க்கவில்லை.

இப்படியான சம்பவங்கள் பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்தி குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால், தட்டிக் கேட்க ஆளிருக்கிறதென்பதை சண்டப்பிரசண்டர்கள்உணர்ந்து எச்சரிக்கையாக நடந்துகொள்வர்.

இனியும் தட்டிக் கேட்காவிட்டால் வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதையாகிவிடலாம்.

இதற்கு இடமளிக்கலாகாது.

## ஆசிரியருக்குக் கடிதம்:

# ஒற்றுமை ஓங்கட்டும்

“சிறை சென்ற இளைஞர்கள் தேர்தலில் நிற்கவேண்டும்” என்ற பேரறிஞரும், அரசியல் அனுபவசாலியுமான திரு. வி. சுந்தரலிங்கத்தின் கோரிக்கை துன்பத்தைத் தருகிறது.

பாரதத்தில் அகிம்சை முறையில் ஆங்கிலேயரின் ஆட்சியை முறியடித்து மக்களின் சுதந்திரத்திற்காகச் சிறை சென்றவர்களில் முதலிடம் பெற்றவர் மகாத்மாகாந்தி. அந்த சாத்வீக வீரர்கூட, மக்கள் யாரையும் தேர்தலில் போட்டியிடுமாறு தூண்டவில்லை.

பேரறிஞர் சுந்தரலிங்கம் அவர்களே, இலங்கையில் தாங்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் சேர்ந்து ஒத்துழைத்து தமிழ்ப் பேசும் மக்களுக்குத் தேடித்தந்த செல்வத்தை என்போன்ற வயது முதிர்ந்த மக்கள் நன்கறிவர்.

தாங்களும், சுயாட்சிக் கழகத் தலைவர், பாரிஸ்டர் அம்பலவாணர் போன்ற பெரியார் மன்ஞர்.

கள் தந்தை செல்வாவுடன் ஒன்றிணைந்து அனைவரும் ஒரே இலட்சியத்திற்காக மக்கள் முன் சென்று வாக்குக் கேட்க வேண்டிய நேரம் இது.

இந்நேரத்தில் இளைஞர்களைத் தேர்தலில் நிற்குமாறு தூண்டுவது சரியானதாகப் படவில்லை.

மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்காகவும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் பொறுப்பான அறிஞர்களை ஆட்சிபீடத்தில் அமர்த்தி, இளைஞர்களுக்கு முன்னேடிகளாகத் திகழ்ந்து, நம் தமிழ் மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாத்து ஒன்றிணைந்து செயற்படுவோமாக.

பெ. மு. கருப்பையா
ஆச்சாரி.

# மீன் பாடும் தமிழகத்தில்

## பண் பாடும் கலைஞருக்குப் பாராட்டு



சங்கீதகலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை இசைஉலகில் ‘சிம்மம்’ எனப்பாராட்டப்பட்டவர். சங்கீதத்துறையில்பழுத்துக் கனிந்த கனி. களங்கண்ட புலி. அன்னரின் சிஷ்யர்தான் தமிழகத்திற் பிறந்து இசை பயின்று பட்டம் பெற்று ஈழம் வந்துஇசைக்கொடியாம்புகழ்க்கொடி நாட்டியமட்டக்களப்பு தாமரக்கேணி சங்கீதபூஷணம் என். இராஜு.

சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளையின் அபிமானத்துக்குரிய அன்புச்சிஷ்யர்களில் ஒருவரான திரு.இராஜு மதுரை ஜில்லாவில் புகழ்பூத்த முதலியார்குடும்பத்திற்பிறந்து இளமையில் நன்கு கற்றர். இசைத்துறை இவருக்குக் கைவந்தது. இப்பொழுது பிரபல நாதஸ்வரவித்துவான்களாகத் திகழும் மதுரை எம். பி. என். சேதுராமன் சகோதரர்களினதும் இவர்களது தந்தையாரினதும் தொடர்பு திரு. இராஜுவுக்கு ஏற்பட்டது. அத்தொடர்பு அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் பட்டத்தைப் பெறவைத்தது. அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் இசைப்பேராசிரியராய் இருந்தவர்களே முதலில் குறிப்பிட்ட சங்கீத கலாநிதி சுப்பிரமணியபிள்ளை.குருசிஷ்ய முறையிற் பயின்றுவந்த திரு. இராஜு, சித்தூராருடன் சேர்ந்து பாடும்வாய்ப்பினையும் தனியாகவே இசைநிகழ்ச்சிகளிற் பங்கு பற்றும் சந்தர்ப்பங்களையும் பெற்றர்.

சங்கீத கலாநிதி சித்தூரார் அவர்களது பாணியைப் பின்பற்றிப்பாடி இரசிகப் பெருமக்களின் அமோக ஆதரவைப் பெற்ற மாணவர்களுள் இராஜுவும் ஒருவர். இசையுலகில் இன்று கிரிதிபமென விளங்கும் மதுரை சோமசுந்தரமும் சித்தூராரின் சிஷ்யரே.

### இராஜுவும் ஈழமும்

ஈழத்தில் உள்ள பட்டம் பெற்ற பழம் பெரும் வித்துவான்களில் பலரும் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் பயிற்சிபெற்றவர்களே. இதன் காரணமாய் ஈழநாட்டுநண்பர்களுடன் தொடர்புகொள்ளும் வாய்ப்பு திரு. இராஜுவுக்கு ஏற்படவே இராஜுஈழத்துக்கு வந்தார். வந்தவர்ஈழத்தையே ஒரு தமிழகமாக்கி விட்டார். அவரை இசையாசிரியர் பதவி தேடிச்சென்று சிறப்படைந்தது.

மீன்பாடும் வாவிகள் மலிந்த மட்டுநகரில், விபுலானந்தத் தேன்பாயும் மண்ணில் மங்கை தங்கம்பொன்னை மணந்து நிலையுறப் பொருந்திவிட்டார் திரு. இராஜு. மட்டுநகரில் இசை பயில் வளர்ச்சிக்குநல்லவித்தை வித்தியபெருமை திரு.இராஜுவுக்கே உண்டு. அவரிடம்ஆரம்பப் பயிற்சியை இசைத்துறையில் பெற்ற மாணவர் பலர் பல்கலைக்கழகங்களில் பிரவேசித்து உயர்பட்டங்களைப்பெற்றுள்ளனர். இராஜுவிடம் பயின்று அப்பொழுதே பல மேடைகளில் பாடிப் பாராட்டைப் பெற்றவர்களுள் ஒருவர் திரு. முருகப்பா ஆவர். நல்ல குரல்வளம் படைத்தவரான முருகப்பா, பல மேடைகளில் முழங்கியபடியால் ‘முழக்கம் முருகப்பா’ என்ற சிறப்புப் பெயரையும் பெற்றர். இவ்வாறு முன்னேறிய பல மாணவர்களுக்கெல்லாம் திரு. இராஜு, குருநாதராய் வாய்க்கப் பெற்றரென்றல் அது மட்டுநகர் செய்த பாக்கியமே.

### இசைக்கச்சேரி

சங்கீதபூஷணம் என். இராஜுவின் இசைக்கச்சேரிவானெலியில் மட்டுமன்றி, ஈழத்தில் பிரபலமான இடங்களில் எல்லாம் நடைபெற்றுள்ளது. பல நூற்றுக்கணக்கான இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றிஇரசிகர்களது உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். ஓங்கா ஒலியெழுப்பும் மணி ஓசையையொத்தது அவரதுகுரல். இராஜுவின் கச்சேரி என்றல் அந்த இடம் பொதுமக்களால் நிறைந்திருக்கும்.

தெலுங்கு, தமிழ் உருப்படிகளைச் சிறப்பாகக் கையாளும் இராஜு திருமுறைகளுக்குத் தனி இடம் கொடுப்பது விசேடமானது. பாடல்களின் அர்த்த புஷ்டி கெடாமற் சொற்சுத்தமாகப் பாடுவதிலும்இராஜு வெகுசாமர்த்தியகாரர். 1961ம் ஆண்டு உரும்பராயில் இடம் பெற்ற பிரபல திருமணவைபவத்தில், இசையரங்கில் பங்குபற்றி மூன்று மணிநேரம் கானவெள்ளத்தில் மூழ்கச் செய்தார் இராஜு. அங்கு பிரசன்னமாயிருந்த இரசிகர்களில் ஒருவரான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அந்த இசையில், ஆராமை மிக்கவராய் இராஜுவின் இசைப் புலமையைப் பாராட்டிப் பேசியதுடன் பொன்னுடையும் போர்த்திக் கௌரவித்தார்.

இத்தகைய சிறந்த கலைஞர் ஒருவருக்கு, மட்டுநகர் மக்களெல்லோரும் ஏகோபித்து மட்டக்களப்பு சங்கீத சபாவின் சார்பில், மட்டுநகர் மாநகரமண்டபத்தில் இப்பொழுது நடத்திக் கொண்டிருக்கும் இசை நடனப்பெருவிழாவில் பொன்னுடை போர்த்திக் கௌரவிப்பது மிகவும் வரவேற்கக் கூடியது.

— அ பஞ்சாட்சரம் —

(செயலாளர், பண்டிதமணி நூல்வெளியீட்டுச்சபை)

### தி.மு.க தொண்டர்கள்

# கழகமெனும் தேன்கூட்டை கலைப்பவர்க்கு ‘தேனீ’ தான்

— மு. கருணநிதி

சென்னை, மார்ச் 3

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணநிதி, தமிழகத்தின் பிரபலவாரசஞ்சிகை ஒன்று தி. மு. கழகத்திற்கு முன்போல் ‘தேனீ’த் தொண்டர்கள் இருக்கிறர்களா? என்று குத்தலாகக் கேட்டுள்ளது குறித்து சூடாகப் பதிலளித்துள்ளார்.

இது பற்றிக் கலைஞர் கூறுகிறர், தம் தொண்டர்களுக்கு இப்படி:

“என் ஆருயிர்க் கழகக் கண்மணியே! உன்னையும், உன் உழைப்பையும், உன் சுறுசுறுப்பையும் எவ்வளவு கேலிக்குரியதாக ஆக்கிக்காட்டுகிறது இச் சஞ்சிகை.

“நீ முன்புதான் ‘தேனீ’யைப் போல் உழைத்து வெற்றியினைக் குவித்தாயாம். இப்போது நீ சோம்பேறியாகிவிட்டாயாம். வெட்டி வா என்றுரைத்தால் கட்டிவரும் உன்னைப் பார்த்து, உண்ணமல் உறங்காமல் ஓய்வுகொள்ளாமல் உழைத்துச் சுழன்றிடும் உன்னைப் பார்த்து,

‘உன்னைத்தான் தம்பி’ என்று அண்ணன் அழைத்து ஆணையிட்டபோதெல்லாம் ‘என்னைத்தான் என் அண்ணன் அழைத்தார்” என்று பணியாற்ற ஓடிவரும் உன்னைப் பார்த்து, இச்சஞ்சிகை கேலி பேசிவிட்டதே. நீ இப்போது ‘தேனீ’ அல்லவாம்.

“பசை காய்ச்சிடவும் தெரியும்— வருகின்ற சுவரொட்டிகளை ஒட்டிடவும் தெரியும். வாக்காளர்களைச் சந்திக்கவும் கற்றிருக்கிறய்— கொடியும் பிடிப்பாய்— கூட்டமும் நடத்துவாய்— கொள்கையை முழங்குவாய்— குறிக்கோள் நோக்கி நடந்திடுவாய்— வீணர் வீழ்ந்துபட வெற்றிகளை வழங்கிடுவாய்— நீயோ ‘தேனீ’ அல்ல!

“நான் நம்பமாட்டேன். என் கண்ணெதிரே காண்கின்றேன், கண்ணின் மணியே உன் உழைப்பை!

“நீ தேனீதான். கழகமெனும் தேன் கூட்டைக் கலைப்பவர்க்கு நீ தேனீயே தான்!” (உ)

# செல்வநாயகத்தை தலைவராக நான் ஏற்றதில்லை; ஏற்கவும்மாட்டேன்'

## கவிஞர் காசிக்கு சுந்தரர் மீண்டும் கடிதம்

(தேர்தலில் போட்டியிட முன்வருமாறும், தனது இயக்கத்தில் சேர்ந்துழைக்குமாறும் கவிஞர் காசிஆனந்தனுக்கு திரு. சி. சுந்தரலிங்கம் கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு கவிஞர் காசிஆனந்தன் பகிரங்கமாக பத்திரிகை மூலம் பதில் அனுப்பியிருந்தார். அந்தப் பதிலுக்கு மீண்டும் திரு. சி.சுந்தரலிங்கம்நேற்று கவிஞர் காசி ஆனந்தனுக்கு கீழ்காணும் பகிரங்க கடிதத்தை அனுப்பியுள்ளார்.)



அன்பார்ந்த
காசி ஆனந்தரே

நீங்கள் கூறிய ஒவ்வொரு விஷயத்திற்கும் பதில் கூற வேண்டியது என்கடமை.முதலாவதாக, நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். 1972-ல் கூட்டணி உருவாகியபோது தந்தை செல்வாவின் தலைமையில் அமைந்த அந்த இயக்கத்தில் நீங்களும், ஒருவராக இருந்தீர்கள். தந்தை செல்வா காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிட்டபோது அவரை ஆதரித்து மேடைகளில் முழக்கமிட்டீர்கள். இன்று எனக்கு எழுதியுள்ள பகிரங்க கடிதத்தில், 23 வருடங்களாக தந்தை செல்வா பிழைவிட்டிருக்கிறார். என்னோடு வாருங்கள் என்று அழைக்கிறீர்கள் இது நியாயமா? உண்மை என்ன?

1972-ம் ஆண்டுக்கு முன் நடந்த பொதுத் தேர்தலில் தந்தை செல்வநாயகம், திரு. வி. பொன்னம்பலம், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. சி. சுந்தரலிங்கம் ஆகியோர் காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்டார்கள். நான் காசு, கசிப்பு, கபட நாடகவேஷங்கள் பாவிக்கவில்லை. மூன்றுவது அபேட்சகராக தோல்வியடைந்தேன். ஆனல் எனக்கு சுமார் 6000 வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை எனக்கு அளித்தார்கள்.

சிறிது நாட்களின் பின் திரு. ஞானமூர்த்தியும், அவரது நண்பர் திரு. சபாரத்தினமும், என்னைக் கீரிமலை வீட்டில் வந்து சந்தித்து 'ஐயா நீங்கள் எங்களோடு சேரா விட்டால் ஒருபலனும் பெற மாட்டோம் என்று கேட்டார்கள். என் தனிப்பட்ட ஈழத் தமிழ் அரசாங்கம் என்ற கொள்கைக்கு பாதகமாக நடக்க மாட்டேன் என்றுகூற அந்தக் கொள்கைக்கு தாங்கள் எதிர்ப்பில்லை என்று கூறினர்கள்.

கட்சியில் சேர தனிஅரசு என்று வசனத்துடன் எழுத்து மூலம் சேர்ந்தேன். இதன் பின் வல்வெட்டித்துறையில் திரு. ஞானமூர்த்தியும் அவரின் நண்பர்களும், 1972-ல் கூட்டணியை உருவாக்கினர்கள். எல்லாத் தமிழர்களும் சேர்ந்தால் தான் அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொள்ளலாம் என்ற கருத்துக்கு வந்தோம். அங்கு கூடிநின்ற இளைஞர்கள் வெடிகொளுத்தி அத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஒருவிருந்து உபசாரமும் நடந்தது.

அதன்பின் ஈழத் தமிழினத்தின் உரிமைகள் பற்றியவேறுபடு பௌத்த சிங்கள அரசாங்கத்தோடு வேறுபட்டபடியால், உங்கள் தந்தை செல்வா பாராளுமன்ற சபையிலிருந்து வெளியேறி இடைத்தேர்தலில் தான் ஈழத்தமிழருக்கு தலைவன் என்ற நோக்கத்துடன் இடைத் தேர்தலில் அரசாங்கத்திற்கு எதிராக திரு. வி. பொன்னம்பலத்துடன் போட்டியிட்டார்.

இடைத் தேர்தல் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டு வரும்பொழுது வாக்குச் சீட்டுப்போட இரண்டு கிழமைக்கு முன் என்னை நேரிலும், எழுத்து மூலமும் தந்தை செல்வநாயகம், வெற்றி பெறுவார் எனத் திடமாகச் சொல்ல முடியாது என என் அன்பர்கள் அறிவித்தார்கள். எனக்குப் பொதுத் தேர்தலில் விழுத்த கிட்டத்தட்ட 6000 வாக்குகளும் திரு. வி. பொன்னம்பலத்திற்கு கிடைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் நடப்பதாக அறிவித்தார்கள், என்ன நடந்தாலும், பௌத்த சிங்கள அரசாங்கம் சார்பில் போட்டியிடும் திரு. வி. பொன்னம்பலம் வெற்றிபெறக் கூடாதெனத் தீர்மானித்தேன்.

அப்பொழுது மலேசியாவிலிருந்த திரு. ஜி.ஜி. பொன்னம்பலத்திற்கு இதுபற்றி அறிவித்து தந்தி அனுப்பினேன். செல்வநாயகத்தை ஆதரிக்குமாறு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒரு தந்தியை அடித்தார். அந்தத்தந்தியை ஒரு பகிரங்க கூட்டத்தில் படித்து பகிரங்கப் படுத்தினேன்.

திரு. செல்வநாயகத்திற்காக தனிப்பட்ட முறையில் கூட்டங்களில் நான் பங்கு பெறவில்லை, செல்வநாயகம் ஈழத் தமிழினத்திற்காகத் தான் போட்டியிடுகிருர் என்று மனதில் வைத்துக்கொண்டுஅவரை ஆதரித்தேன்.

திரு. செல்வநாயகம் எனது தலைவரென்று ஒரு பொழுதும் ஒரு கனவிலும் சிந்திக்கவில்லை! சிந்திக்கப் போவதும் இல்லை.வாக்குச்சீட்டுப்போடுவதற்கு முதல்நாளுக்கு முதல் நாள் வவனியாவுக்குத் திரும்பி விட்டேன். வாக்குப் போடும் பகலிலோ, வாக்கு எண்ணும் இரவிலோ நான் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை.

நான் திரும்பவும் சொல்லுகிறேன்: திரு. செல்வநாயகத்திற்கும் திரு. வி. பொன்னம்பலத்திற்கும் இடையில் தனிப்பட்ட முறையில் நடந்த போட்டியில் நான் ஈடுபடவில்லை. நான் ஈடுபட்டது பௌத்த சிங்கள அரசாங்கத்திற்கும், ஈழத் தமிழினத்திற்கும் இடையில் நடந்த போட்டியில் அவர்கள் இருவரையும், படங்களாகப் பாவித்து தேர்தலில் ஈடுபட்டேன். இதுதான் உண்மை.

ஒரு சிறுவிஷயம்! நான், கீரிமலைக்கு என்னை அழைக்காத பட்சத்திலும், தேர்தலில் ஈடுபடும் நோக்கத்தோடு அங்கு சென்றிருந்தேன். நீரும் உம்முடன் சில இளைஞர்களும், வீட்டுக்கு வந்து நீரே, உம்மை அறிமுகப்படுத்தினீர்.

நான் உங்களை அன்புடன் வரவேற்றேன்.

நீங்கள் இயற்றிய பாடலை, பாருங்கள்' என்று காட்டினீர்கள். நீங்கள் பாடியதாவது என் ஞாபகத்தின்படி 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள விரும்புவதில் என்ன குறை என்று பாடினீர்கள். 'ஏன்' ஒருமுறைஎன்றுபாடினீர்கள்' என்று நான் கேட்டேன். பலமுறை' என்று மாற்றிக் கொள்ளுங்கள். என்றேன் அதற்கு நீங்கள் இணங்கினீர்கள்.

இந்தச் சந்திப்புக்கு முன், நான் நேர்முகமாகத் தங்களைச் சந்திக்கவில்லை. கவிஞர் என்ற கோதாவில்தான் அறிந்திருந்தேன். (க)

# "சாரணிய இயக்கத்தின் நோக்கம் என்ன?"

மட்டுவில், வியாழன்

'அனைத்துலகிலும் சாரணிய இயக்கத்தை சேர். பேடன் பவல்துரை எந்த அடிப்படை இலட்சியத்துடன் கட்டி எழுப்பினரோ அந்த அடிப்படைத் தத்துவத்தினைப்பேணி நாம் சாரணிய இயக்கத்தைத் தொடர்ந்தும் வளர்க்கவேண்டும்' என்று தென்மராட்சி பச்சிலைப்பள்ளி சாரணசிரியர் சங்கம் நடத்திய சாரணிய இயக்க ஸ்தாபகர் சேர் பேடன் பவல் துரை நினைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் வடமாநில பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ். பி. சிவபாதம் கூறினர்.

கைதடி நவீல்ட் பாடசாலை மைதானத்தில் வட்டாரக் கல்வியதிகாரி திரு. சி. இராசநாயகம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு. சிவநாதன் மேலும்பேசுகையில் 'சாரணிய இயக்கம் வளர்க்கப்படுவதற்கு செய்திறன் மிகுந்த ஆசிரிய உலகம் என்றும் அக்கறைகாட்டவேண்டும். அது அவர்களின் கடமையாகும். சேவைசெய்வதே சாரணியத்தின் குறிக்கோள். எனவே சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க பல்லாண்டுகளாகப் பாடுபட்டுவரும் இச் சாரணிய இயக்கத்தை வளர்ப்பதில் நமது பாடசாலைகளும் தீவிரம் காட்டவேண்டும்' என்றுர்.

சாரண உதவி மாவட்ட ஆணையாளர் திரு. வி. ரி. நடராசா, மாவட்ட ஆணையாளர் திரு. எஸ். கந்தமூர்த்தி, உதவி ஆணையாளர் திரு. சிவகடாட்சம் உட்படப் பலசாரண ஆணையாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்த 13 பாடசாலைச் சாரணர் இதில்கலந்து பல நிகழ்ச்சிகளை நடத்தினர்.

சாரணரின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது. வெற்றிக்கேடயத்தை சாவகச்சேரி இந்துக்கல்லூரி பெற்றுக் கொண்டது.

இதனை சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் தமது தந்தை செல்லப்பாஞாபகமாக அன்பளிப்புச் செய்திருந்தார்.

பரிசில்களை கைதடி நவீல்ட் பாடசாலை அதிபரின் பாரியார் திருமதி முத்துக்கிருஷ்ணன் வழங்கினர். உதவி மாவட்ட ஆணையாளர் திரு. நடராசா நன்றியுரை வழங்கினர். (இ)

யாழ். வளாகத்தை கட்டிஎழுப்புவதில்

# பெரும் பங்குவகித்தவர் பேராசிரியர் கனகசபாபதி

— வளாகத் தலைவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுமார் 30 ஆண்டுகள் பல்கலைக்கழக சேவையிலும் கடந்த சில ஆண்டுகளாக யாழ், வளாகத்தைக் கட்டி எழுப்புவதிலும் பெரும் பங்கு வகித்து வந்த காலஞ்சென்ற பேராசிரியர் கனகசபாபதியின் அளப்பரிய சேவையைப் போற்றும் சின்னமாக அவரின் உருவப்பட்டத்தை திரைநீக்கம் செய்வதில் பெருமை அடைகிறேன்.

இவ்வாறு யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி நேற்று முன்தினம் யாழ். வளாக வட்டுக்கோட்டைப் பிரிவில் உள்ள ஒட்லி மண்டபத்தில் மறைந்த பேராசிரியர் கனகசபாபதியின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்துவைக்கையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய விஞ்ஞானபீடத் தலைவர் பேராசிரியர் கே. குணரத்தினம் தமது உரையில், காலஞ்சென்ற பேராசிரியர் கனககபாபதி வகுப்பறைகளில் கல்விப் போதனைகளை நடத்துவதில் மட்டும் கவனம் செலுத்தாது மாணவர்களின் ஏனைய பிரச்னைகளிலும் அக்கறை கொண்டுள்ளார் என்றும் அந்த வகையில் அவருடைய நினைவாக இந்த ஓவியத்தை வளாக விஞ்ஞான பீடத்தில் வைப்பதில் விஞ்ஞானபீடத்தினராகிய நாம் பெருமை அடைகிறோம் என்றுர்.

விஞ்ஞானபீட விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் சார்பில் உயிரியில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கன் தமிழிலும் கணித விரிவுரையாளர் மனோரத்தின சிங்களத்திலும் உரை நிகழ்த்தினர்.

விஞ்ஞானபீட மாணவர்கள் சார்பில் என். தர்மராஜாவும் ஜயந்த ஜயவிக்கிராவும் ஊழியர்கள் சார்பில் க. கருணனந்தராஜாவும் உரை நிகழ்த்தினர். கணிதவியல் புள்ளி விபரவியல் துறை பதில் தலைவர் கலாநிதி பாலன் செல்லையா நன்றி கூறினர்.

## மௌன அஞ்சலி

கிளிநொச்சி, வியாழன்

தமிழர் கூட்டணி உறுப்பினர்கள் இளைஞர் பேரவை, மகளிர் பேரவையினரின் கூட்டத்தில் மறைந்த சட்டமேதை திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஆத்மசாந்திக்காக 3 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. திரு. வி. ஆனந்தசங்கரி எம். பி. தலைமையில் நடைபெற்ற இவ்வஞ்சலிக் கூட்டத்தில் திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கனகபுரம் கி. மு. சங்கம் அமரர் ஜி. ஜி. யின் குடும்பத்திற்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியில் அன்னுர் மறைவு தமிழ் சமுதாயத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று குறிப்பிட்டுள்ளது. (அ)

# நிலையான அரசு இந்தியாவில் அமையாதாம்

## சண்முகதாசன் கூறுகிறுர்

பருத்தித்துறை,வியாழன்

'இன்று இந்திராகாந்தியின் காங்கிரசை எதிர்த்து நிற்கும் கட்சிகளை ஒரேபார்வையில் நோக்கினுல், தேர்தல் முடிவுகள் இந்திய மக்களின்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாதென்பதைச் சுலபமாகஉணரலாம். ஜனதா கட்சியின்கீழ் அணிதிரண்டுள்ள சகல பிரதான வலதுசாரி எதிர்க்கட்சிகளும் மேற்கத்திய சார்புடைபுடையன என்பது வெளிப்படை'.

இவ்வாறு சீனசார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. நா. சண்முகதாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் கூறுவதாவது: இந்தியத் தேர்தல் முடிவுகள் எப்படியிருந்தபோதிலும், இருவிஷயங்கள்பற்றி நிச்சயமாகக் கூறலாம். ஒன்று பெரும்பாலான இந்திய மக்களின் ஆதரவைப்பெற்ற ஒரு நிலையான அரசாங்கம் நிறுவப்படமுடியாது. இரண்டாவதாக இந்தியாவின் பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணமுடியாது. அதே நவ காலனித்துவ சுரண்டல்முறை, அதே விளைவுகளுடன் தொடர்ந்து நடைபெறும்'.

'இந்திராகாந்தி சர்வாதிகாரத்தில் நிகழ்ந்துவரும் அடக்குமுறை, பிரிட்டிஷார் காலத்திற்கூட இவ்வளவு மோசமான அளவுக்குப் போகவில்லையென்றும் பிரதமர் இந்திராவின் அரசியல் எதிரிகள் 35000 பேருக்கு மேல் சிறையுட் தள்ளப்பட்டதாகவும் சண்முகதாசன் தமது அறிக்கையில் மேலும்குறிப்பிட்டுள்ளார். (அ)

## நால்வர் தெரிவு

இணுவில், வியா,

C16 க்கு மேற்பட்டவிவசாய பாதணுசிரியர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 80 க்கு மேற்பட்ட இளம் விவசாயிகள் கடந்த வாரம் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றினர். யாழ். மாவட்ட இளம் விவசாயிகள் போதனுசிரியர் திரு. சி. சிவானந்தம் எழுத்துப் பரீட்சை மூலம் மாவட்ட அடிப்படையில் 4 இளம் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டனர். விபரம் வருமாறு:-

செல்வன் சிவகுமார் சதானந்தா, இ. வி. க. அளவெட்டி. செல்வன் சொ. யோகசுந்தரம், திருநெல்வேலி, இ. வி. க. செல்வன் பரமேஸ்வரன், கல்விளான், இ. வி. க. செல்வி மனோன்மணி, இராமநாதபுரம், இ. வி. க. (அ)

## வீதியின் அவல நிலை

யாழ்ப்பாணம், வெள்ளி

தாவடிச்சந்தியில் இருந்து பிள்ளையார்கோவிலடி வரை செல்லும்வீதி மேடும், பள்ளமுமாக வாகனங்கள் எதுவும் செல்ல முடியாத நிலையில் உள்ளதாக புகார் செய்யப்படுகிறது.

இவ்வீதியைச் செப்பனிடதாமதமற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கோரப்படுகிறது. (உ)

### செம்மணி சம்பவம்

# ஒருவரை 'சுட்டாச்சு' என்று பிரயாணிகள் சத்தமிட்டனர்

## பஸ் சாரதி சாட்சியம்

**"என் ஆசனத்தை விட்டு நான் எழுந்த சமயம், ஒரு வெடிச்சத்தம் கேட்டது. பஸ் பிரயாணிகள் சத்தமிட்டார்கள். ஒருவரை சுட்டாச்சு என்றனர். நான் அப்பொழுது இறங்கி மிதி பலகையில் நின்று எட்டிப் பார்த்தேன். அப்போது வயலுக்குள் இடதுபுறமாக பத்துயார் தள்ளி ஒரு சயிக்கிள் விழுந்துகிடந்தது. சுமார் 10 நிமிடம்வரை எவராவது விழுந்து கிடந்தவரின் அருகில் செல்லவில்லை"**

செம்மணி துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் மரணமான நாவற்குழியைச்சேர்ந்தபொன்னம்பலம் பரராசாவின் மரண விசாரணையில் சாட்சியமளித்த பஸ் சாரதி அப்புத்துரை யோகலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.'

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் இம்மரண விசாரணை நடைபெற்றது.

11-8-76 பிற்பகல் மரண விசாரணை ஆரம்பமானது. பொலிஸ் தரப்பில் ஏ. எஸ். பி. திரு. பெரேரா, தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ஜே. டபிள்யூ. குணதிலகா, சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

### சட்டத்தரணிகள்

இறந்தவரின் நலனைக்கவனிப்பதற்காக சட்டத்தரணி எஸ். நடராசா, சட்டத்தரணி சி. நாகராசா, சட்டத்தரணி வி. யோகேஸ்வரன், சட்டத்தரணி எம். ஆலாலசுந்தரம், மற்றும் சட்டத்தரணிகளான செ. அம்பிகைபாலன், ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

### சாட்சிகள்

சின்னையா சந்திரன், நல்லையா தங்கராசா, குட்டியன் இரத்தினமணி, பொ. ஆ. கருணாபாலா, சப்இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை, பொ. சண்முகராசா, சி. பாலசுப்பிரமணியம், இ. இலட்சுமணன், செல்வி பொ. தேவகி, சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம், சி. பொன்னம்பலம், செ. சதானந்த மூர்த்தி, வே. செல்வராசா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

14-8-76 காலையிலிருந்தே நீதிமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். ஆயுதம் தாங்கிய பொலிசார் நீதிமன்றத்திற்கு வெளியில் காணப்பட்டனர். சந்திகளிலும், பொலிசார் காணப்பட்டதுடன், ஜீப்பில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்தனர்.

சந்தேகநபர்களான கான்ஸ்டபிள் ஸ்ரான்லி கான்ஸ்டபிள் தர்மதாசா ஆகியோரும் விசாரணையின்போது, நீதிமன்றத்திற்குவந்திருந்தனர்.

கோர்ட்டின் கட்டளைப்படி, நண்பகல், கோண்டாவில் இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர், சம்பவதினம் இரவு, பிரயாணிகளை செம்மணிப் பாதையால் கொண்டுசென்றதாகக்கூறப்படும் பஸ்சாரதியான அப்புத்துரை யோகலிங்கத்தையும், பஸ் கண்டக்டரையும் கோர்ட்டிற்குஅழைத்துவந்திருந்தார். நண்பகல் இடைவேளையின்போது அவர்களை எவருடனும் கதைக்கவிடாமல் பார்த்துக்கொள்ளுமாறு நீதவான், டிப்போ அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

பிற்பகல்மீண்டும் விசாரணை ஆரம்பமானதும் நீதிமன்றத்திற்குள் ஜனக்கூட்டம் அதிகரித்திருந்தது.

### சாரதி சாட்சியம்

பஸ் சாரதியான சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த அப்புத்துரை யோகலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவம் நடந்த தினமான 10-8-76 இரவு 9-30 மணியளவில் நான் 23 சிறி 2216 இலக்க பஸ்வண்டியை செலுத்திவந்தேன். இரவு 9-30 மணியளவில் முத்திரைச் சந்தியிலிருந்து பஸ் புறப்பட்டது. செம்மணி வீதியால், சாவகச்சேரியை நோக்கி பஸ்ஸை செலுத்திக்கொண்டிருந்தேன். அப்பாதையால் நான் பஸ்ஸை செலுத்திக்கொண்டிருக்கும்போது செம்மணி வீதியில்தூரத்தில் ஏதோ ஜுவாலையாக எரிந்துகொண்டிருந்தது. நான் அதை நோக்கிச் சென்றுதொண்டிருந்தேன்.

### எரியும் பஸ் வண்டி

எரிந்து கொண்டிருந்த பஸ் வண்டிக்கு 25யார் தூரத்தில் சென்றுவிட்டேன். எனக்குமுன்பாக இரண்டு கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. நான் எனது பஸ் வண்டியை கார்களுக்குப் பின்னால் நிறுத்தினேன். அதே நேரத்தில் எதிர்ப்புறமாக இருந்து நான்பஸ்ஸை நிறுத்தியிருந்த இடத்தை நோக்கி ஒரு இ. போ. ச. பஸ் வண்டி வந்துகொண்டிருந்தது. அந்த பஸ் வண்டி எரிந்துகொண்டிருந்த பஸ்வண்டிக்கு அப்பால் நிறுத்தப்பட்டிருந்தது.

### பொலிஸார் விரட்டினர்

ஒரு சொற்பநேரத்தில் துப்பாக்கிகளுடன் 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் எரிந்து கொண்டிருந்த பஸ் வண்டியை சுற்றிப்பார்வையிட்டனர். அப்பொழுது சனங்கள் அப் பாதையால் போக்குவரத்துச் செய்துகொண்டிருந் தார்கள். அவர்களை அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்கள், திருப்பி எனது பக்கமாக விரட்டி, என் பஸ் நின்ற இடம்வரை துரத்திக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது நான் எனது பஸ்ஸிலிருந்து இறங்கி பஸ் முன்னால் ரோட்டில் நின்றேன்.

### நான்தான் சாரதி

அச்சமயம் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் வந்து யார் பஸ் வண்டி சாரதி எனக் கேட்டார். நான் தான் பஸ் சாரதியெனக் கூறினேன். பொலிஸ் உத்தியோகத்தர் பஸ் வண்டியில் இருந்த பிரயாணிகளை இறங்கி கால்நடையாகச் செல்லும்படி கூறுமாறு என்னிடம் சொன்ஞர். அது முடியாவிடில் வாடகைக்கார்களைப் பிடித்து வீட்டுக்குச் செல்லுமாறு பிரயாணிகளிடம் கூறுமாறு அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் கூறினர்.

உடனே நான் பஸ் வண்டியில் ஏறி, பஸ்ஸை பின் நோக்கிச் செலுத்தினேன். பொலிஸ் உத்தியோகத்தர் கூறிய எதனையும் நான் பிரயாணிகளுக்குக் கூறவில்லை. எனது பஸ் கண்டக்டர் இடது புறமாக நின்று வழியைச சரிபார்த்து சொன்னர். வலது புறமாக பிரயாணிகள் சிலர் நின்று வழியை சீர்பார்த்துச் சொன்னர்கள். நான் பஸ் வண்டியைப் பின்நோக்கிச் செலுத்தினேன்.

### இயந்திரத் துப்பாக்கியுடன்

நான் எனது பஸ் வண்டியை பின்னுக்குச் செலுத்தும் போதுஒருஇயந்திரத்துப்பாக்கியுடன நீளக்காற்சட்டை அணிந்த பொலிஸ் உத்தியோகத்தரும், மற்றும் இரண்டு அரைக்கால்சட்டை அணிந்த பொலிஸ் உத்தியோகததர்களும் எனது பக்கமாக வந்தார்கள். அப்படி அவர்கள் முன்னேறிவந்து கொண்டிருந்த பொழுது வழியில் வநது கொணடிருந்த சனங்களை விரட்டி விட்டுக்கொண்டுவந்தார்கள். அப்போது நீளக் காற்சட்டை அணிந்த பொலிஸ் உத்தியோகத்தர், எனது பஸ் வண்டியின் முன் பக்க லைட்டை அணைதது, பஸ் வண்டியை நிறுததும்படி கூறினர். நான் அவர் கூறிய படியே, முன்பக்க லைட்டை அணைத்து பஸ் வண்டியை நறுததனேன்.

### வெடிச்சத்தம்

எனது ஆசனத்தை விட்டு எழும்பும்பொழுது ஒரு வெடிச்சத்தம் கேட்டது. பஸ்பிரயாணிகள் சப்தமிட்டார்கள். ஒருவரை 'சுட்டாச்சு' என்றார்கள். அப்பொழுதுநான் இறங்கி, மிதிபலகையில் நின்றுகொண்டு எட்டிப்பார்த்தேன். அச் சமயம் பார்க்கும்போது வயலுக்குள் இடது பக்கமாக 10 யார் தூரத்தில் ஒரு சயிக்கிள் விழுந்து கிடந்தது.

### லைட்டை அணைத்தேன்

அங்கு வந்த ஒரு பொலிஸ் உததியோகத்தர் பஸ் வண்டிக்குள் எரிந்துகொண்டிருந்த லைட்டை அணைக்கும்படி கூறினர். நான் அவர் கூறியபடி பஸ் வண்டிக்குள் எரிந்து கொண்டிருந்த லைட்டை அணைத்தேன். சுமார் 10 நிமிடம் வரை யாராகுதல்விழுந்து கிடந்தவருக்கு அருகில் செல்லவில்லை. அப்பொழுது ஒரு ஜீப் வண்டி எனது எதிர்ப்புறமாக இருந்து மிகவும் வேகமாக வந்துகொண்டிருந்தது.

### வேகமாக வந்த 'ஜீப்'

இவ்வளவும் நடந்துகொண்டிருந்தபொழுது எனது பஸ் வண்டி சாவகச்சேரியை நோக்கிவந்துகொண்டிருந்தது. வேகமாக வந்துகொண்டிருந்த ஜீப் வண்டி, வயலுக்குள் விழுந்துகிடந்த இடத்திற்கு சமீபமாக நின்றது. நல்லூர்ப் பக்கம் நோக்கியபடி நின்ற அந்த ஜீப் வண்டியின்முன லைட் அணைக்கப்படாமலிருந்தது.

### மனிதனைப் பார்த்தார்கள்

அந்த ஜீப் வண்டியின் லைட் வெளிசசம் விழுந்து கிடந்தவரை நோக்கி அடிக்கவில்லை. அப்பொழுது நீளக் காற்சட்டை அணிந்த சிவில் உடை தரித்த ஒருவரும், மூன்று அல்லது நானகு பொலிஸ் உததியோகத்தர்களும் வயலுக்குள் விழுநது கிடந்த மனிதனை நோக்கிச் சென்ஞர்கள். அவர்கள் டோசலைட்டை அடித்துக் கொண்டு போய், விழுந்து கிடந்த மனிதனை பார்வையிட்டார்கள். அப்படிநின்ற உத்தியோகத்தர் ஒருவர் ஜீப் வண்டியில் இருந்தவருக்கு, ஜீப் வண்டியின லைட்டை அணைக்கும்படி கூறினர். அவர்கள் பார்த்தபின் ரோட்டுக்கு வந்தார்கள்.

### சாவகச்சேரிப் பக்கமாக

அப்பொழுது அக் கூட்டத்திலிருந்துவந்த பொலிஸ்உத்தியோகத்தர் ஒருவர் பஸ் வண்டியை சாவகச்சேரி பக்கமாகக் கொண்டுபோகும்படி சொன்ஞர்.

அந்த பொலிஸ் உத்தியோகத்தர் கூறியவாறு நான் பஸ்வண்டியை சாவகச்சேரிப் பக்கம் நோக்கிச் செலுத்தினேன். அதற்கு முன்பாக என் பஸ் வண்டிக்கு முன்னல் நின்ற இரண்டு கார்களும் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரின் கட்டளைப்படி சாவகச்சேரி நோக்கிச் சென்றன. அக் கார்கள் சென்றபின்தான் பஸ்ஸை செலுத்தினேன்.

### செல்ல முடியாது

நான் சாவகச்சேரி சென்று அங்கிருந்து பத்தேமுக்கால் மணிக்கு புறப்பட்டு, அதே மார்க்கமாக திரும்பி செம்மணி வீதிக்கு வரும்பொழுது மூன்று பொலிஸ்உத்தியோகத்தர்கள், அந்தப் பாதையால் செல்ல முடியாது என்று கூறினர்கள். நான் பஸ் வண்டியை கண்டி வீதி வழியாக திருப்பிக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து கோண்டாவில் பஸ் டிப்போவிற்கு போய் டிப்போ அதிகாரி தியாகராசாவுக்கு பார்த்தவற்றைக் கூறினேன்.

நீதவானின் கேள்விகளுக்கு பஸ் சாரதி கூறிய பதில் நாளை தொடர்ந்து வெளியாகும்.

### சி. எஸ்ஸின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் கூட்டணியை ஒப்பிட முடியுமா? இதுவரை நாட்டை ஆண்டவர்கள்தானே கௌரவர்களாக இருக்கமுடியும்?

வனவாசத்தைவிடக் கொடுமையான 'மிசா' சிறைவாசத்தை அனுபவித்துவிட்டுத் திரும்பியிருக்கும் எதிர்க்கட்சிக் கூட்டணியினர்தானே பாண்டவர்களாக இருக்கமுடியும்? எப்படியோ தெரிந்தோ தெரியாமலோ திரு. சுப்பிரமணியம் இத்தேர்தலைப் பாரதக் கதைக்கு ஒப்பிட்டது ஒரு வகையில் வரவேற்கத்தக்கதேயாகும்.'' (உ)

### தமிழ்நாட்டில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படவுள்ளது.

நியூயோர்க் எடுத்துச் செல்லப்படவுள்ள நடராஜர்நிலை சிதம்பரம் ஆலயத்தில் விசேட பூசையில் வைக்கப்பட்டது. நடராஜர் சிலையுடன் மற்றும் இருவிக்கிரகங்களும் எடுத்துச் செல்லப்படும். (ஆ)


மிளகாய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியானல் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமட் எல்.சி 50%

மேற்கு ஜர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி



● நெல் ● உருளைக்கிழங்கு ● திராட்சை
● புகையிலை ● போஞ்சிவகை ● தோடை
● காய்கறி ● பூஞ்செடி ● பருத்தி
● மறுவகை ● கோப்பி ● வெங்காயம்

மேலும் பொலிமற், திரீப்ஸ், அழுக்கணவன், வெண் ஈ, சிற்றுண்ணி, போஞ்சி ஈ, தத்துக்கிளி துனை புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

பொலிமற் பயிர்களை ஊக்கமாகவும், திடகாத்திரமாகவும் வளரச்செய்யும்.

பொலிமற் உடன் கெந்தகம் கலக்கப்படாது பயிர்களை பாதுகாக்க தாமதியாது பாவியுங்கள் பொலிமற்.

தயாரிப்பாளர்;

ஹேகெம் லிமிடெட்

400 டீன்ஸ் ரோட் கொழும்பு-10

டெலிபோன் 93563 - 96331

வின்ஸர் கமலஹாசன் - ஸ்ரீவித்யா
[யாழ். நகர்] சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த

**அபூர்வ ராகங்கள்**

மனோகரா 5-வது வெற்றி வாரம்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ராதாசலூஜா
நிர்மலா
வீரப்பா
நடித்த
சத்யா மூவிஸ்



**இதயக்கனி**

[ஈஸ்மன் கலர்]

வெலிங்டன் சிவாஜி - சரோஜாதேவி
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்

**விடிவெள்ளி**

லிடோ போன்: 7693 சிவகுமார்—ஜெய்சித்ரா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த

**வெள்ளிக்கிழமை விரதம்**

(புதிய பிரதி)

ராஜா இன்று மட்டும்
[யாழ். நகர்] ஜெய்சங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த

**தாய்க்கு ஒரு பிள்ளை**

6-3-77 முதல்

**கோமாதா என் குலமாதா**

(புதிய பிரதி)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார்-ஜெய்சித்ரா

**தேன்சிந்துதே வானம்**

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா

**தனிப்பிறவி**


# இலங்கையிடம் இங்கிலாந்து தோற்றது!

கொழும்பு, வியா

இலங்கைக்கும் – இங்கிலாந்துக்குமிடையில் நேற்று கொழும்பு எஸ். எஸ், ஸி. மைதானத்தில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட '30 ஓவர்' கிரிக்கெட் போட்டியில் இலங்கை கோஷ்டி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துக் கோஷ்டி, இலங்கை கோஷ்டி வீரர்களின் அபாரப் பந்து வீச்சினால் 28 ஓவர்களிலேயே சகல விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்களை பெற்றது. ஏமீஸ் 32 ஓட்டங்களையும், பிளேச்சர் 19 ஓட்டங்களையும் பெற்றனர். ஒப்பாத்தா, களுப்பெருமா, வந்துல வர்ணபுரா ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்கள்.

இதன்பின் துடுப்பெடுத்தாடிய இலங்கைக் கோஷ்டி மிக வேகமாக ஓட்டங்களை எடுத்தது. இதில் டி. மெண்டிசும், தென்னக்கோனும் சோடிசேர்ந்து மின்னல் வேகத்தில் ஓட்டங்களை எடுத்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. மெண்டிஸ் 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இதில் இவர் இரண்டு 'சிக்ஸர்களை' அடித்தார். தென்னக்கோன் 15 ஓட்டங்களையும், வெற்றிமுனி 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கைக் கோஷ்டி 26 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 124 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்துக் கோஷ்டியை மூன்று அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (ஆ)


நாகமஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி

**ஆலயமணி**

RIO (Jaffna) Daily Four Shows

**DOUBLE TAKE**

From 6-3-77

**KARATE AMAZONS**

Regal (Jaffna) Daily 4-45, 7-00 & 9-30 P. M.

How Powerful or False is The Occult? A Question Asked Time and Again is put to Test in this Suspenseful Film. The First of Superstar Leonard Nimoy to Come to Sri Lanka.

LEONARD NIMOY SUSAN HAMPSHIRE
in

**BAFFLED!**

(Color)

ராணி கமலஹாசன் -- தீபா - சாவித்திரி
[யாழ்நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்

**அந்தரங்கம்**


## வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

விடமைப்பு, தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் இன்று காலை பருளாய் முருகமூர்த்தி கோவிலுக்கு தரிசனத்துக்காகச் செல்வார். தொடர்ந்து 9மணிக்கு மூளாய் சித்திவிநாயகர் முத்துக்குமாரசாமிஆலய அபிஷேக ஆராதனையிலும் கலந்துகொள்வார். தொடர்ந்து மூளாயில் அமைச்சருக்கு வரவேற்பு நடைபெறும். (ஆ)


இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்!
★ பாட்டும் பரதமும் மோதிக்கொள்ளும பண்புமிகு சித்திரம்!



**யாழ். ஸ்ரீதரில்...**

தினசரி 4 காட்சிகள்

கதையில் - கருத்தில் கன்னத்தமிழ உரையாடலில்
இசையில் - பாடல் ஆடல்களில்
வசூலில் வாகைசூடிய படம்.

★ நடிகர்திலகம் சிவாஜிகணேசன் (இருவேடங்களில்)
★ ஜெயலலிதா ★ விஜயகுமார்
★ கோபிகிருஷ்ணா ★ மனோகர்
★ சுந்தரராஜன் ★ மனோரமா
வாசு — சுகுமாரி — ஸ்ரீப்ரியா—ஸ்ரீலட்சுமி—விஜயசந்திரிகா

மற்றும் பலர் நடிக்கும்

**பாட்டும் பரதமும்**

(ஈஸ்ட்மன்கலர்)



ஈழநாடு சந்தா
(தபால் மூலம் விநியோகம்)
(தினசரி – வாரமலர் உட்பட)

| | | |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. | 47-00 |
| 6 மாதம் | ரூ. | 94-00 |
| 1 வருடம் | ரூ. | 188-00 |

# ஈழநாடு
The EELANADU

ஈழநாடு சந்தா
(ஆள் மூலம் விநியோகம்)
(யாழ்- மாநகரசபை எல்லைக்குள்)
(தினசரி- வாரமலர் உட்பட)

| | | |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. | 37-50 |
| 6 மாதம் | ரூ. | 75-00 |
| 1 வருடம் | ரூ. | 150-00 |

# விவசாயக் காணிகளை பதிவு செய்து விட்டீர்களா?

## தவறினால் அரசுடைமையாகும்!

### கமத்தொழில் சேவைநிலையம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

புத்தூர் விவசாய சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாயிகள் தமதுகமத்தொழில் காணிகளை காணி இடாப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. காணிஇடாப்பில் பதிவுசெய்யப்பட்ட காணிகளை மட்டுமே விவசாய ஆளடையாள அட்டைகளில் பதிவு செய்யமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயம் செய்யப்படும் எந்தவொரு காணிகளும் கமத்தொழில் சேவை நிலையத்தினரின் காணிப்பதிவேட்டில் பதியப்படாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால், அவை அரசாங்கத்தின் காணியாகக் கருதப்பட்டு அரசாங்கம் அந்தக் காணிகளை தனதாக்கிக்கொள்ளும் என்று புத்தூர் கமத்தொழிற்சேவை நிலையம் அறிவிக்கிறது.

இங்குள்ள காணிப்பதிவேடு புனரமைப்புச் செய்யப்படுவதால், இப்பகுதியில் உள்ள சகல விவசாயிகளும் தாங்கள் பயிர்செய்யும் காணிகளை உடனடியாகப் பதிவுசெய்துகொள்ளுமாறு ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது. இம்மாதம் 31-ம் திகதிக்குமுன்னர் புத்தூர் விவசாய சேவை நிலையத்தில் பெறப்படும் விண்ணப்பத்தில் காணி விபரங்களை முறைப்படி விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது இப்படியிருக்க, இங்குள்ள இலங்கை வங்கிக் கிளையில் விவசாயக்கடனைப் பெற்றிருந்தவர்கள் உரியகாலத்தில் அவற்றைத் திரும்பச்செலுத்தும் பட்சத்தில் புதிதாகக் கடனுக்குக் கவனிக்கப்படுவதாக கிளை முகாமையாளர் திரு.கே. சின்னையா தெரிவித்தார்.

இதன்மூலம் இப்பகுதி விவசாயிகள் அதிக பயனைப்பெற முடிவதுடன் காலத்துக்குக் காலம் வங்கிமூலம் பெறக் கூடிய சகல வசதிகளையும்பெற முடிகிறது என்று சொல்லப் படுகிறது. (ஆ)

## வீதியில் அநாதரவாகக்கிடந்த இந்தக்கார் யாருடையது?

அம்பன், வியாழன்

அம்பன் பொலிஸ் பகுதியில் வீதியொன்றில் அநாதரவாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்ட கார் ஒன்று அம்பன் பொலிஸில் வைக்கப்பட்டுள்ளது.

1 ஸ்ரீ 2150 இலக்கத்தை உடைய இக்கார் 'ஸ்கோடா' ரகத்தைச் சேர்ந்தது. கொள்ளைக்குப் பயன்படுத்தும்பொருட்டு இக்கார் கடத்திவரப் பட்டிருக்கலாமென்று பொலிஸார் கருதுகின்றனர்.

காரின் சொந்தக்காரரை அம்பன் பொலிஸ்நிலையத்திற்குப் பொலிஸார் அழைக்கிறார்கள். விரல் அடையாளம் எடுக்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஆ)

## மூதாட்டியிடம் சங்கிலி அபேஸ்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அத்தியடியில் நேற்று முன்தினம் இரவு மூதாட்டி ஒருவரின் கழுத்தில் இருந்த சங்கிலி கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நடந்தது.

அத்தியடி புது வீதியைச் சேர்ந்த சின்னம்மா என்ற 70 வயது மூதாட்டி தனது வீட்டில் இருந்தபோது இனந்தெரியாத ஒருவர் புகுந்து இக் கொள்ளையை நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. இரவு 7 மணியளவில் இச்சம்பவம் நடந்ததாம். (ஆ)

......

### கச்சதீவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடைக்காரர்கள் எடுத்துச் செல்லக்கூடிய பொருட்கள் சம்பந்தமாகக் கட்டுப்பாடு விதிக்கப்படும்.

#### படகு அனுமதி

பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான வள்ளங்களுக்கு உரிய அனுமதிப்பத்திரம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

#### சவர்க்காரம்

ஒரு யாத்திரிகர் ஒருவாசனை சோப்பையும் சலவைக்கான மற்றொரு சவர்க்காரத்தையும் மட்டுமே தம்முடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார். (உ)

## சிறையிலிருந்து இரண்டு வாலிபர் தப்பியோட்டம்

கொழும்பு, வியாழன்

கொக்கலைச் சிறையிலிருந்து இரண்டு வாலிபர்கள் தப்பி ஓடிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஒருவரின் பெயர் வசந்தரஞ்சித் (வயது22)மார்பில் 'விஜே' என்று எழுதப்பட்டுள்ளது. 'நினைத்தபடி வாழ்வோம்' என்ற வாசகம் முதுகில் பச்சை குத்தப்பட்டுள்ளது.

மற்றவரின் பெயர் பி. எம். இக்பால் (வயது 22). இடது காலில் பழைய புண் தழும்பு உள்ளது. முதுகில் பிறப்புக் குறிகள் இரண்டு உள்ளன.

இவர்கள் பற்றிய விபரம் அறிந்தோர் பொலிஸாருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஆ)

## குடும்பப் பெண்ணின் வாழ்வை முடித்த தீ!

யாழ்ப்பாணம், வெள்ளி

மணமாகி ஒரு பிள்ளைக்குத் தாயான இளம் பெண் ஒருவர் தீப்பற்றி மரணமானார்.

இப்பரிதாப சம்பவம் கொழும்புத்துறையில் நிகழ்ந்துள்ளது.

தர்மன் ரோஸ்மலர் (வயது 23) என்ற இப் பெண்ணின் மரணம் குறித்து யாழ். திடீர் மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ். பிராசிஸ் விசாரணை நடத்தினார்.

சம்பவதினமான கடந்த மாதம் 18ம் திகதி காலம் சென்றவர் வீட்டில் தேநீர் தயாரித்துக் கொண்டிருக்கையில் அவரது பாவாடையில் தீ எதிர்பாராதவகையில் பற்றியதாம்.

யாழ். பெரியாஸ்பத்திரிக்கு விரையப்பட்ட இவரது உயிர் கடந்த புதன்கிழமை மாலை பிரிந்தது. காலஞ் சென்றவருக்கு ஒரு வயதுப் பிள்ளை ஒன்று உள்ளது என்றும் சாட்சியம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

### அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அமைச்சர் பதவி, எனக்குக்கிடைத்த தனிப்பட்ட கௌரவமல்ல. இது தமிழ்மக்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகும். நாட்டில் உள்ள பிரச்னைகளை தமிழ்மக்களாலோ, சிங்கள மக்களாலோ தனித்துத் தீர்த்துவிடமுடியாது. இருபகுதிமக்களும்சேர்ந்தாலே பிரச்னைகள் தீரமுடியும்.

#### சமரச முயற்சியால் மகிழ்ச்சி

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் நிலைமையை உணர்ந்து இப்போது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

''பச்சைமண்ணும் சுட்ட மண்ணும் ஒருபோதும் ஒட்டாது' என்று சொன்னவர்களே இணைந்துகொள்ள முடிமென்றால் நாம் இணைவது அசாத்தியமானதல்லவே.

#### எனக்குள்ள பாரிய பொறுப்பு

சுதந்திரக்கட்சியின் உறுப்பினன் என்ற வகையில் மட்டுமல்ல நானொரு தமிழ் மகன் என்ற ரீதியிலும் எனக்குப் பாரிய பொறுப்புண்டு.

சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் சகோதரர்களாக இணைத்துவைக்கின்ற பணியை நான் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

இப்புனிதமான பணியில் வெற்றிகிடைக்கும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.

#### குறுகிய அரசியல் போக்கு

சில கட்சிகள் தொழிற்சங்க நடவடிக்கைகளுடன் மட்டும் தமது அரசியலை வைத்துக் கொண்டு செயற்பட்டன.

ஆனால் சுதந்திரக்கட்சி மட்டுமே தொழிலாளர்களுடன் சேர்ந்து விவசாயிகளினது குறைகளையும் தீர்த்து வைக்க செயற்பட்ட ஒரேகட்சியாகும்

சுதந்திரக்கட்சியை தவிர்த்து வேறு எக்கட்சிகளாலும் ஒரு இடதுசாரி அரசாங்கத்தை இந்நாட்டில் அமைக்க முடியாது'.

#### விநோதன்

திரு. விநோதன் தமது தலைமையுரையில், ''அமைச்சர் குமாரசூரியர் அவர்களைத் திரண்டுநின்று மகத்தான முறையில் வரவேற்கக்கூடிய வகையில் சுதந்திரக்கட்சி வடக்கில் பெரும் பலம் பெற்று வளர்ந்துள்ளது'' என்றார்.

ஏழாலை கிராமசபைத் தலைவர் திரு. கே. சிவகுரு, திரு. நடராசா முதலானோரும் பேசினர். (உ)

## இன்று திறப்பு விழா

மாவிட்டபுரம், வியாழன்

வீடமைப்பு நிர்மாணத் துறை, தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் நாளை வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபையின் பரந்தன் கிளைக் காரியாலயத்தை கிளிநொச்சியில் திறந்துவைப்பார்.

மேற்படி சபைத் தலைவர் திரு. என். ஆர். பி. தனத்வத்தயும் இவ்வைபவத்தில் கலந்துகொள்வார். (உ)

## இவர்களிடம் ஏமாறாதீர்

நெல்லியடி, வியாழன்

பருத்தித்துறை வல்லிபுரக் கோவில் திருப்பணிக்காக நிதி சேகரிப்பதாகக் கூறி சிலர் மோசடியில் ஈடுபட்டுள்ளதாகவும் இவ்விதமானவர்கள்மீது எச்சரிக்கையாக இருக்குமாறும் மேற்படி கோவில் பரிபாலனசபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஆ)

### பண்ணும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் தலைமையில் ஈழநாடு காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரம்மஸ்ரீ எஸ். சுப்பிரமணியம் (விரிவுரையாளர் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை), எம். கோபாலகிருஷ்ணன் (விரிவுரையாளர் யாழ். வளாகம்), திரு. ராம். குமாரசாமி, எஸ். எம். கோபாலரட்ணம், திரு. இ. மகாதேவன், டாக்டர் சிவஞானரட்ணம், திருமதி ஞானகுலேந்திரன் (யாழ். வளாகம்) ஆகியோர் சிறப்புரை வழங்குவர். (ஆ)

## சங்கானையில் இன்று சத்தியாக்கிரகம்

சங்கானை ப. நோ. கூ. சங்க நிர்வாகத்திற்கு எதிராகவும் வேலைநிறுத்தத்துக்கும் ஆதரவு தெரிவிக்குமுகமாகவும் இப்பகுதி பொதுமக்கள், பொதுச் சபை பிரதிநிதிகள், கிளைக்குழு அங்கத்தவர்கள் ஆகியோர் வேலைநிறுத்தத்தைத் தீர்த்து வைக்கக்கோரி இன்று காலை 8 மணி முதல் சங்கானை உதவி அரசாங்க அதிபர் காரியாலய முன்றலில் சத்தியாக்கிரகம் ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர். (இ)

### சுபசிங்கா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வகித்து வருகின்றனரென்றும் தாங்கள் கூறியுள்ளீர்கள். ஆனால் இது பற்றி தாங்கள் இதுவரை ஏன் மௌனமாக இருந்தீர்கள் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

#### என். எம்.மின் கூற்றிலிருந்து ...

தாங்கள் ராஜினாமாச்செய்யலாம் என்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி தங்கள் நோக்கங்களை நன்றாக அறிந்தவராக இருந்த டாக்டர் என். எம். பெரேராவின் அண்மைக்காலக் கூற்றிலிருந்து முன்கூட்டியே அறியக்கூடியதாக இருந்தது.

#### தன்னம்பிக்கை இழந்துவிட்டீர்கள்

தாங்கள் தன்னம்பிக்கை இழந்து சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியுமின்றி ஐக்கிய முன்னணி அரசுஇயங்காது என்று தப்பாக நினைத்துவிட்டீர்கள். உங்களிலேயே உங்களுக்கு நம்பிக்கையில்லாமல் போய்விட்டது என்று நான் கருதவேண்டிவந்ததற்குஎன்னை மன்னிக்கவும்:

### சீமெந்து, புடவை தட்டுப்பாடு

தங்கள் அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிய சீமெந்து புடவைக் கூட்டுதாபனங்களில் உற்பத்தி செய்யப்படும் புடவை, சீமெந்துக்கு நாட்டில் தட்டுபாடு இல்லாமல் இல்லையே. இதேவேளையில் பொருளாதார முன்னேற்றம் இல்லையென்று கூறுவதில் அர்த்தமில்லை. (இ)

**அரிசி ஆலை விற்பனை**

வவுனியாவின் வடக்கில் முல்லைத்தீவுக்குச் செல்லும் பிரதான பாதையிலுள்ள நெடுங்கேணி கிராமத்தில் பச்சை அரிசி, புழுங்கல் அரிசி குற்றுவதற்கேற்பமுழு வசதிகளுடனடங்கிய ஆலை விற்பனைக்குள்ளது. முன்னறிவிப்பால் பரிசீலனை செய்ய அனுமதி பெறவும், தொடர்புகொள்ளவும், வேண்டியமுகவரி: எஸ்.மகாதேவன், 32, கின்ரோஸ் அவனியூ, கொழும்பு-4. 5591

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P O. Box 49, Jaffna Telegram: Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.